சுருக்கம்

பள்ளிக் கல்வி - தமிழகத்திலுள்ள மேல்நிலை/உயர்நிலைப் பள்ளிகளில் 'விளையாட்டு உலகம்' மாத இதழ் பள்ளி விளையாட்டுக் கட்டண நிதியிலிருந்து வாங்குவது - அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி (இ2)த் துறை

அரசாணை (நிலை) எண் 56

நாள் 1.3.2000

படிக்கப்பட்டது

பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித எண்.125814/என்1/99 நாள் 6.12.99 மற்றும் 1.2.2000

**ஆணை**–'விளையாட்டு உலகம்' என்ற தமிழ் மாத இதழில் பள்ளி (மற்றும்) கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் விளையாட்டுத் துறையில் ஆர்வம் உள்ளவர்கள் ஆகியோரை ஊக்கப்படுத்துவதற்காக விளையாட்டுச் செ–திகள் மாதந்தோறும் வெளியிடப்படுவதாலும், இதில் கிரிக்கெட், டென்னிஸ், ஹாக்கி, வாலிபால், கபடி போன்ற வெளி அரங்க விளையாட்டுக்கள் குறித்தும், பில்லியர்ட்ஸ், செஸ், கேரம்,டேபிள் டென்னிஸ் போன்ற உள்ளரங்க விளையாட்டுக்கள் குறித்தும் விளக்கி வருவதாலும்,மத்திய அரசு, தமிழக அரசுப் பள்ளிகளுக்கிடையே விளையாட்டுச் செ–திகள், சலுகைகள், பரிசுகள் போன்ற விபரங்கள் வெளியிடப்படுவதாலும், பள்ளி மாணவர்களுகக்கான உடற்பயிற்சிகள்,யோகா, உணவு முறைகள் குறித்தும் பள்ளி மாணவ, மாணவிகள் எவ்வாறு மாநில, தேசிய, சர்வதேச அளவில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பது என்ற விபரங்களும், வேலை வா–ப்புகள், விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தும் செ–திகள், உடல்நலம் மற்றும் உடற்பயிற்சி ஆகியவை குறித்தும் இப்பத்திரிகையில் வெளியிடப்படுவதாலும், பள்ளி மாணவ மாணவிகள் கிராமப்புற இளைஞர்கள் உள்ளிட்ட விளையாட்டுத் துறையில் உடற்பயிற்சிகள் ஆர்வம் உள்ள அனைவரும் படித்துப் பயன்பெற்று தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்க்கும் இதழாக வெளியிடப்படுகிறது என்றும், மேற்படி தமிழ்மாத இதழை தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் வாங்கி பயன்பெறத்தக்க வகையில் அனுமதி வழங்குமாறு இவ் இதழின் ஆசிரியர் அரசை வேண்டியிருந்தார்.

இதுகுறித்து பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்து கோரப்பட்டது. இதழாசிரியரின் கோரிக்கையினை ஏற்று அனைத்து உயர்நிலை மேல்நிலை பள்ளிகளிலும் விளையாட்டுக் கட்டண நிதியிலிருந்து 'விளையாட்டு உலகம்' மாதந்திர வெளியீட்டினை வாங்கி பயன்பெறத் தக்க வகையில் ஆணை வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செ–துள்ளார்.

பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்தது இதற்காகும் செலவினம் பள்ளிகளில் உள்ள விளையாட்டுக் கட்டண நிதியிலிருந்து சரிகட்டப்பட உள்ள நிலையிலும் இதனால் அரசுக்கு கூடுதல் செலவினம் இல்லை என்ற நிலையிலும், பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரைகளை ஏற்று அனைத்து உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளிலும் விளையாட்டுக் கட்டண நிதியிலிருந்து **'விளையாட்டு உலகம்'** தமிழ் மாத இதழை வாங்கிப் பயன்பெறத்தக்க வகையில் அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

இவ்வாணையினை அனைத்து சார்நிலை அலுவலகம் / அனைத்துப் பள்ளி/ மேல்நிலைப்பள்ளிகளுக்கும் தக்க நடவடிக்கைக்கு சுற்றனுப்புமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**எம்.ஏ. கௌரி சங்கர்**
**அரசுச் செயலாளர்**

**பெறுநர்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6

தொடக்க கல்வி இயக்குநர். சென்னை–6

**நகல்**

கல்வி அமைச்சரின் சார்புச் செயலாளர், சென்னை–9

ஆசிரியர், வெளியீடுகள்
"விளையாட்டு உலகம்"
5, லோட்டஸ் ராமசாமி தெரு,
இராயபுரம், சென்னை–600 013

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. குறள் 391

கே.ப.6.3

இதைத் தொடர்ந்து **விளையாட்டு உலகம்** தமிழ் மாத இதழை பள்ளிகளுக்கு வாங்க தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரும் பரிந்துரைத்துள்ளார்.

செயல்முறைகள் 124917/ எம்3/2008 நாள் 8.4.2009

மற்றும்

ந.க.எண் 125814/என்2/99 நாள் 28.3.2000

மாநில முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் அவர்களின் செயல்முறைகள்
ந.க.எண் 246/அ/2000 நாள் 24.3.2000

Owned and Published by V.Muthugurusamy from 2/1j, Kummalamman Koil street, Tondiarpet, chennai - 81 and Printed by V.Muthugurusamy at New Karthik Printers, No.26A, Bharadheeswarar Colony, Kodambakkam, Chennai - 24, Editor V.Muthugurusamy